
மர்ம மாளிகை!
லயன்
காமிக்ஸ்
ரூ-3/-

லயன் காமிக்ஸ்

# ஹாட் லைன்!

(82)

ன் ரசிகர்களே,

கோடையின் கடுமைக்கு ஒரு புதுவகை நிவாரணி தயாராகி வருகிறது!

ஆமாம்-அடுத்த மாதம் ரூ. 10/- விலையில் வரவிருக்கும் **''லயன் ஹாலி-டே ப்பர் ஸ்பெஷல்''** பற்றித் தான் சொல்கிறேன்......!

ஏகப்பட்ட யோசனைக்குப் பிறகு 1987 தீபாவளிக்கு ரூ. 10/- விலையில் ஒரு சூப்பர் பெஷல் வெளியிட்டிருந்தோம்! எங்கள் எதிர்பார்ப்பையும் மிஞ்சிய அதன் வெற்றியைத் தாடர்ந்து ஒவ்வொரு வருடமும் அதைப் போலவே மலர் வெளியிட வேண்டுமென்று னைத்திருந்தேன்!

ஆனால் - அந்த எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்க இத்தனை காலம் ஆகிவிட்டது! ஆகையால் அடுத்த மாதம் வரவிருக்கும் **''லயன் ஹாலி-டே சூப்பர் ஸ்பெஷல்''** ப் பார்க்க உங்களைப் போலவே நானும் மிக மிக ஆர்வமாக இருக்கிறேன்!

சூப்பர் - ஸ்பெஷலில் அரை டஜன் கதைகள் உள்ளன! உங்கள் பழைய தோஸ்தான ஸ்பைடர் ரொம்ப காலத்திற்குப் பிறகு ஒரு முழு நீள சாகஸக் கதையோடு உங்களை சந்திக்கத் தயாராக இருக்கிறான்!

அப்புறம் பெருச்சாளிப் பட்டாளம் என்றழைக்கப்படும் ஒரு விசித்திரக் கும்பல் உங்கள் அறிமுகத்திற்காகக் காத்திருக்கிறது! இவர்களது சாகஸம் உங்களுக்குப் பிடித்திருந்தால், அடிக்கடி லயனில் தலை காட்டச் செய்யலாம்!

அதைத் தொடர்ந்து-

**F. B. I. ஏஜெண்ட் காரிகன்** தனது பழைய எதிரியான டாக்டர் செவனோடு ஒரு முழு நீளத் த்ரில்லரில் ஆக்ரோஷமாக மோதுகிறார்!

ஏற்கனவே உங்களை சந்தித்துள்ள **விந்தை மனிதன் ரேடாரும், மறையும் மாயாவி ஜாக்கும்**ஹாலிடே ஸ்பெஷல் மூலம் மறு பிரவேசம் செய்கிறார்கள்!

இறுதியாக **சி. ஐ. டி. ரிப் கிர்பியும், பட்லர் டெஸ்மாண்டும்** ஒரு படு வித்தியாச மான கதையில் அமர்க்களம் பண்ணுகிறார்கள்!

எல்லாக் கதைகளின் விளம்பரங்களும், இந்த இதழின் கடைசிப் பக்கங்களில் உள்ளன! ஹாலி-டே சூப்பர் ஸ்பெஷலின் அட்டைப்படத்தில் ஸ்பைடரும், காரிகனும் அட்டகாசமாகப் போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அதை முன்கூட்டியே பார்க்க விரும்பும் வாசகர்கள், உடனே ஒரு போஸ்ட் கார்டு போடுங்கள்! அட்டைப்படத்தோடு, கதைச் சுருக்கங்கள் கொண்ட நோட்டீஸையும் அனுப்புகிறோம்! க்விக்!

வழக்கம் போல் உற்சாகம் + ஆதரவு தந்து **''லயன் ஹாலி-டே சூப்பர் ஸ்பெஷல்''** ஒரு சூப்பர் வெற்றியாக்குவீர்களென்ற நம்பிக்கை எனக்கு உண்டு! மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்

எஸ். விஜயன்


மரண மாளிகை!
லயன் காமிக்ஸ்
ரிப் கிர்பியின் புதிய
சாகஸம்!



பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அந்த மாளிகை வாழ்க்கையின் சகல பரிமாணங்களையும் பார்த்து அனுபவித்த பெருமை கொண்டது!
ஆனால் இன்றிரவோ மரணத்தின் வாடை வீசுவதை அங்கே உணர முடிந்தது!
மருந்து எதுவும் வேண்டாம் டாக்டர்!
ப்ளீஸ், மேலே உள்ள அந்தப் பத்திரிக்கையை எடுங்கள்!
என்ன பார்க்க விரும்புரீங்க மிஸ்டர் டோரியன்!
டாக்டர் அட்டைப் படத்திலுள்ள பெண் கொள்ளை அழகு-இல்லையா?
TREN
அவள் பெயர் ஹனி! என் சகோதரி மகள்! அவளுக் காக ஏதாவது செய்ய விரும்புகிறேன்.
அந்தப் புது வக்கீல் பயலை வரவழையுங் கள்!
இப்பொழுதே கூப்பிடுகிறேன் நீங்கள் ரெஸ்ட் எடுங்கள்!


இவ்வளவு காலமாக நான் உயில் எழுதாமல் இருந்தது தப்பு! அதைஇப்பொழுது நிவர்த்தி செய்தாக வேண்டும்!
மேடம்-உங்கள் விருப்பப்படியே வக்கீல் டக்ளஸை வரச் சொல்லியிருக்கிறேன்!
என்னவோ தெரியலை-பழையவக்கீலான ஷெர்மன் மீதிருந்த நம்பிக்கை வர மாட்டேன்கிறது! பாவம் ஷெர்மன் மண்டையை போட்டுவிட்டார்!
மிஸஸ் டோரியனின் உடல்நிலை மோசமாக உள்ளதா? ஆல்ரைட் டாக்டர் நான் உடனே வருகிறேன்!
கிழவி இந்த மாளிகையை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு மண்டையை போட்டாள் என்றால் சூப்பராக இருக்கும்!
வக்கீலின் எண்ணங்களில் நேர்மை இல்லை!
மிஸஸ் டோரியனுக்கு இனி செய்யக் கூடிய வைத்தியம் எதுவுமில்லை! எனக்கு இன்னொரு அவசர கேஸ் இருக்கிறது-நான் கிளம்புகிறேன்!
நான் கவனித்துக் கொள்கிறேன் டாக்டர்! அவர் சொல்லுகிறபடி உயில் எழுதவேண்டியதுதான் பாக்கி!
ஹலோ மிஸஸ் டோரியன்!



என் சகோதரியின் மகளான ஹனிக்கு இந்த மாளிகையையும், சொத்துக்களையும் விட்டுச் செல்ல விரும்புகிறேன்! அதற்கான உயில் எழுத வேண்டும்!
ஓ-கே. மேடம்!
அதைத் தொடர்ந்து.
இந்த உயிலில் கையெழுத்திடுங்கள். சாட்சிக்கு இரண்டு பணியாட்களை அழைத்து வருகிறேன்!
என் மீது நிஜமாகவே அன்பு செலுத்தியது ஹனி மட்டும்தான்!
சற்றைக்கெல்லாம்-
மிஸஸ் டோரியன் இறந்துவிட்டார்! சரியான சமயத்தில் தான் உயில் எழுதியிருக்கிறோம்! உயிலை பதிவு செய்ய ஏற்பாடு செய்கிறேன்!
மூதாட்டியின் மரணச்செய்தி வாரிசுதாரரான ஹனிக்கு எட்டியது!
ஓ-ரிப்! என் பெரியம்மா இறந்துவிட்டாராம். அவர் சொத்துக்களுக்குவாரிசாக என்னை நியமித்திருப்பதாக ஒரு வக்கீலிடமிருந்து கடிதம் வந்துள்ளது!
ஒரு கெட்ட செய்தி-ஒரு நல்ல செய்தி! ம்ம்ம்- எனது அனுதாபங்களையும்-வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஹனி!



உன்னுடன் உன் பெரியம்மா வீட்டுக்கு நான் வரட்டுமா?
கேட்டதற்கு ரொம்ப நன்றி ரிப்! ஆனால் பெரியம்மாவின் சொத்துக்களை நான் பராமரிக்கப் போவதில்லை! விற்றுவிடலாமென்று நினைக்கிறேன்!
உங்களுக்கு இங்கே தலை… மேலே வேலை உள்ளது… எனக்குத் தெரியும்! என… பாதுகாப்புக்காக பொறு… பான ஆளை… அழைத்துச்… செல்ல நினை… கிறேன்!
''பொறுப்பான'' அந்த ஆள் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார்!
பட்லர்கள் சங்கத்திற்கு அந்நேரம் வந்த டெலிபோன் கால்-பல விசித்திர சம்பவங்களுக்கு முன்னோடி என்பதை அப்பொழுது எவரும் உணர்ந்திருக்க முடியாது!
ஓ.கே.சார்! நா… விக்கர்ஸ்க்கு… சொல்லிவிடு… கிறேன். நாங்க… இருவரும் உட… புறப்பட்டு வ… கிறோம்
கார்னர் பாக்கெட்டில் ஐந்து போடப் போகிறேன்!
சற்றைக்கெல்லாம்-
ஒரு சில வாரங்களுக்குத்தான் அங்கே இருக்க வேண்டியதிருக்கும்!
ஆல்ரைட் சார்! விடுமுறையின் போது எக்ஸ்ட்ராவாக பணம் சம்பாதிக்க ஒரு வாய்ப்பாக இதை கருதுகிறேன்!
விக்கர்ஸ் வருவது ஒரு வித… தில் நல்லது ரிப்! நீங்கள் எ… னோடு வரும் போதெல்லாம் ஏதாவது புதுப்புது ஆபத்… கள் முளைக்கின்றன!



விக்கர்ஸ்-ஒரு சில நாட்களில் நாம் டோரியன் மாளிகைக்குப் புறப்படலாம்!
ஓ.யெஸ் மிஸ் ஹனீ! உங்களையும் சரி, உங்கள் சொத்தையும் சரி, உயிரைக் கொடுத்துப் பாதுகாப்பேன்!
அதே சமயம், டோரியன் மாளிகையில்
இந்த வீடு ஒரு தங்கச் சுரங்கம்!
அநியாயமாய் கிழவி எல்லாவற்றையும் தாரை வார்த்துக் கொடுத்து விட்டாள்!
கிழவியின் உயிலில் கோல்மால் பண்ண வாய்ப்பில்லை-
ஆனால் இந்தச் சொத்துக்களை எப்படியாவது அடைந்தாக வேண்டும்!
நானும் லெனோரும் சேர்ந்து ஏதாவது ஒரு திட்டம் தீட்டியாக வேண்டும்!
லெனோர்-ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க உனக்கு ஒரு சான்ஸ்! எனக்கு ஒத்தாசை பண்ணினால் ஏகப்பட்ட பணம் கிடைக்கும்- அத்தோடு என் இதயத்திலும் நீ இடம் பிடித்துக் கொள்ளலாம்!
எனக்கு பேராசை கிடையாது கண்ணா! பணத்தை மட்டும் எனக்குக் கொடு- உன் இதயத்தை நீயே வைத்துக்கொள்!




டோரியன் எஸ்ட்டேட்டுக்கு வாரிசான ஹனி இங்கு வரப்போகிருள்!
அதற்கு நான் என்ன செய்வதாம்?
அந்தச் சின்னப் பெண்ணை எப் யாவது பயமுறுத்தி விட்டால் மாளிகையையே தலைமுழுகி விடுப்பாள்! அப்புறம் சொற் விலைக்கு மாளிகையை வாங்கி விடலாம்!
அங்கே நியூயார்க்கில்-
ஜாக்கிரதை ஹனி! ஏதாவது பிரச்சினை என்ருல் எனக்கு உடனே போன் பண்ணு!
தேங்க்ஸ் ரிப்!
விக்கர்ஸ், நீ பாடி கார்டாகவும், பட்லராகவும் போகிருய்! எதற்கும் இந்தத் துப்பாக்கியை எடுத்துப் போயேன்!
ரொம்ப தேங்க்ஸ் டெஸ்மாண்ட்!
ஆனல் கராத்தேயில் நான் 'ப்ளாக் பெல்ட்' வாங்க முயற்சித்தேனே அதை மறந்துவிட்டாயா?
முயற்சிதானே செய்தாய்?


ஹனியும் ஒரு பட்லரும் இன்றிரவு வருகிறார்கள்!
டார்லிங்! நம் வேலையை எப்போது ஆரம்பிப்பது?
எவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்கிறோமோ- அவ்வளவு நல்லது! இன்றிரவே பெண் ஆவியை அரங் கேற்ற வேண்டியது தான்!
வாடகை கார் எடுத்துள்ளேன் மேடம்! கிளம்பலாமா?
ஓ.கே. விக்கர்ஸ்!
மாளிகைக்குப் போகும் வழியை வக்கீல் டக்ளஸ், போனில் சொன்னார், அதனால் சிரமம் ஏதும் இருக்காது என்று நினைக்கிறேன்!
நல்லது மேடம்!
அங்கே பார்! வி-விக்கர்ஸ்
ஒரு விநோத உருவம் சாலையை மறித்துக் கொண்டு நின்றது!


ஓர் இளம் பெண் குறுக்கே நிற்பது போல தெரிகிறது மிஸ் ஹனி!
காரை நிறுத்து விக்கர்ஸ். என்ன விஷயம் என்று பார்ப்போம்!
ஒரு நாடகத்தின் முதல் காட்சி அரங்கேறியது!
ஹலோ - ஏதேனும் பிரச்னையா?
என்னுடைய கா
பள்ளத்தில் விழுந்
விட்டது. நல்லகால
அடி ஏதும் படவில்
என் வீட்டுப்பக்கத்தில் 'டிராப்' பண்ணினால் ரொம்ப உதவியாக இருக்கும்!
வீடு ரோட்டின் மேல் தான். நான் வழி சொல்கிறேன்!
வசதியாக பின்னால் அமர்ந்து கொள்ளுங்கள்.
ரொம்ப நன்றி!
இந்த மடையன்களை லேசாக முட்டாளாக்கி விடலாம்!
அப்பொழுது 'கூட்ஸ்' ரயில் ஒன்று குறுக்கே சென்றது!


சரவகாசமாகப் போகுது பாருங்கள் !
RAIL ROAD CROSSING
N.P.
20014
STOP ON RED SIGNAL
நமக்கு அவசரம் ஏதுமில்லே ! மெதுவாகவே, போகலாம்.
அருமையான சந்தர்ப்பம் இது ! ரயில் போகிற சத்தத்தில் நான் நழுவுவதை இவர் கவனிக்கப் போறதில்லே !
கார் நின்றது லெஜேருக்கு உதவியாக இருந்தது !
அப்பாடா ! ஒரு வழியாக கடைசிப் பெட்டியும் வந்து விட்டது !
541670
வண்டியை எடு விக்கர்ஸ் !
மை டியர் மண்டுகளா ......! இன்னும் கொஞ்ச நேரத்தில் ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது உங்களுக்கு !


நான் இறங்கியதை யாரும் கவனிக்கவில்லே !
மிஸ ! நீங்க எங்கே இறங்கனுங்கிறதை சொல்லுங்கள் !
வி....விக்கர்ஸ்....அவள் ...அவள் இங்கே இல்லே !
அச்சச்சோ .....அவள்....இங்கே தானே இருந்தாள் ! அதற்குள் எப்படி மாயமாய் மறைந்து விட்டாள் ?
கதவுகள் எல்லாமே முடியுள்ளன ! அவள் கீழே விழுந்திருக்க முடியாது.
முதலில் வீட்டுக்குப் போ..வோம் ! அதன் பின் அங்கிருந்து போலீசுக்கு ரிப்போர்ட் செய்யலாம் !
ஆரம்பமே சரியில்லே மிஸ் ஹனி !


ஓ ! ...... இது தானு புகழ்மிக்க டோரியன் மாளிகை.
ஆமாம் ! விக்கர்ஸ் ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றுல் – நான், இங்கே வருவதும் இது தான் முதல் தடவை !
எனது பெரியம்மாவை நியூயார்க்கில் தான் எப்போதும் பார்த்திருக்கின்றேன் ! இந்த மாளிகை என்றுல் அவருக்கு உயிர் !
விருந்தினர்கள் வந்து விட்டார்களா? லெனோரின் ஸ்டண்ட எந்த அளவிற்கு வெற்றி என்று பார்ப்போம் !
வேலைக்கு அமர்த்திய புதிய பணிப்பெண்ணுக்கு எல்லா விபரமும் தெரியும். வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான் !
மறுகணம் அந்தப் புராதன மாளிகை முழுவதும் இருளில் முழ்கியது.
சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கிறதல்லவா ..........மில்லி ?
ஓ யெஸ், மிஸ்டர் டக்ளஸ் ! அதோ – கதவை தட்டுகிருர்கள் !



இதென்ன விக்கார்ஸ்-வீடு முழுவதும் திடீரென இருட்டாகி விட்டத ?
'பெல்' லும் வேலை செய்யவில்லை !
மிஸ் ஹனி ? உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தோம் ... இப்போது தான் கரண்ட் கட் ஆச்சு !
இப்படி அடிக்கடி கரண்ட் போகுமா ?
ஓ ...! இங்கே வினோதங்களுக்குப் பஞ்சமே கிடையாது ! மிஸ் ஹனி !
பயணம் நல்லபடியாக இருந்ததாமேடம் ?
பயணம் சுகமாகத்தான் இருந்தது ! ஆனால் வழியில் ஒரு விசித்திரமான நிகழ்ச்சி !
ஹலோ ! நான் தான் லாயர் டக்ளஸ் ! மறைந்த உங்கள் பெரியம்மாவின் வக்கீல் ! உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் என்னிடம் சொல்லுங்கள் !
முதல் வேலையாகப் போலீசுக்கு போன் செய்யணும் !


போலீசுக்கா ? ஏன் என்ன விஷயம் மிஸ் ஹனி ?
வழியில் ஒரு இளம் பெண எங்கள் காரை நிறுத்தி "லிப்ட்" கேட்டாள் !
அவளுக்கு காயம் ஏதும் பட்டது போல் தோன்றவில்லை !
ஆனால் தன்னுடைய கார் பள்ளத்தில் விழுந்து விட்டது என்றும், அதனால் வீடு வரைக்கும் "லிப்ட்" கொடுங்கள் என்றும் கேட்டாள் ! அப்படித்தானே ?
ஆ ... ஆமாம் !
காரில் ஏறி உட்கார்ந்த பிறகு காணாமல் போய்விட்டாள் ! சரியா?
எப்படி... எப்படி... இது உங்களுக்குத் தெரியும் ?
நேரில் பார்த்தமாதிரியே எல்லாவற்றையும் சொல்கிறீர்களே ?
இதே கதையை பலபேரிடம் பல வருடங்களாகக் கேட்டிருக்கின்றேன் மேடம் !
என்ன சொல்கிறீர்கள் ? இந்தப் பெண்ணை நிறையப் பேர் பார்த்திருக்கிறார்களா ?


அந்த ஆவி உருவத்தை வருஷத்துக்கு ஒரு முறையாவது யாராவது பார்த்து விடுவார்கள்
ஏ..... என்றால் நம்பவே முடியவில்லையே
ஆ.... ஆவியா ? மிஸ் ஹனி. இட்லியிலிருந்து வரும் ஆவியைத் தவிர மற்ற வகை ஆவியெல்லாம் நமக்கு சரிப்படாது ! பேசாமல் ஊருக்குத் திரும்பி விடுவோம்.
போலீசார் இந்தக் கதையை பல பேரிடம் பலமுறை கேட்டிருப்பதால் நாம் சொன்னால் சிரிப்பார்கள். முதலில், மின்சாரம் வருவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.
ஓ...கே ! முதலில் அதைச் செய்யுங்கள்.
கொஞ்ச காலத்துக்கு முன் இதே ரோட்டில் – தன் திருமணத்துக்கு முதல் நாள் ஒரு பெண் விபத்தில் செத்துப் போனாள்.
அதிலிருந்து இந்தப் பேய்கதை ஆரம்பித்து விட்டதாக்கும்,?
யெஸ்.. மில்லி–மெழுகு வர்த்திகளை கொழுத்தி மேடமின் ரூமைக் காட்டு.
ஹம்மம் ..... டெஸ்மான்ட் 'அக்கடா' வென்று நியூயார்க்கில் இருப்பான் ! இங்கே நான் ஆவிகளோடு அவஸ்தைப் பட வேண்டியிருக்கிறது.


குட்நைட்! மிஸ் டோரியன்! காலையில் உங்களைச் சந்திக் கிறேன்!
ஓ. கே. மிஸ்டர் டக்ளஸ்! காலையில் பெரியம்மாவின் எஸ்டேட் பற்றி பேச வேண்டியுள்ளது! குட் நைட்!
அந்த மட்டிற்கு போனாவது ஒழுங்காக வேலை செய்கிறதே! இங்கே நடக்கும் வினோதங் களை ரிப்பிடம் சொல்ல வேண்டும்.
போச்சுடா! லிப்ட் கேட்கும் ஆவியா? இதுவும் புதுசாகத் தானிருக்கிறது.
விக்கர்ஸ் மடையன் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறானாம்!
மிஸ்டர் டக்ளஸ் பொறுப்பானவராகத் தான் தெரிகிறார்! பார்க்கலாம்.
அசத்திட்டே போ லெனோர்! அந்தப் பொண்ணும் பட் .லர் விக்கர்ஸும் பாதி செத்து விட்டார்கள்!
பாதி தானே! மீதி யையும் சீக்கிரமே எடுத்து விடலாம்!



இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ஹனீயும் விக்கர்ஸும் விரைவில் ஊர் திரும்பி விடுவார்கள்!
அப்புறமென்ன! பாதி சொத்து எனக்கு என்பதை மறந்து விடாதே!
மிஸ்டர் டக்ளஸ் சொன்னபடி செய்யலாம்!
ஆஹா! கரண்ட் வந்து விட்டது!
குட்மார்னிங் மிஸ்டர் டக்ளஸ்! மிஸ் ஹனீ கொஞ்ச நேரத்தில் கீழே வருவார்கள்!
ஓ. கே. விக்கர்ஸ்
வக்கீல் தனது வேலையில் குறை வைக்கவில்லை!
இந்த வீட்டில் உள்ள பொருட்களை முதலில் பட்டியல் போடவேண்டும்.
டக்ளஸ் என் பெரியம்மாவின் சொத்துகளை விற்று காசாக்குவது என் நோக்கமல்ல.
இந்த மாளிகையை அப்படியே நகர சபையிடம் ஒப்படைக்கப் போகிறேன்! இதை ஒரு மியூசியமாக மாற்றினால் அருமையாக இருக்கும்!


அருமையான ஐடியா!
என் பிணத்தின் மீது தான் அது நடக்கும்!
நான் கீழே போய் கொஞ்சம் சுற்றிப் பார்க்கப் போகிறேன்
நீங்கள் விரும் பினால் நானும் கூட வருகிறேன்
இந்த மாளிகையின் அழகு அதன் புதிய உரிமையாளரின் அழகுக்கு ஈடு கொடுக்கிறது.
அப்பாடி! இதற்கு முன்னால் எங்கே யாவது ஐஸ் பாக்டரியில் வேலை பார்த்தீர்களா!
ரொம்ப நல்லவராக இருக்கிறார்! என் பெரியம்மாவின் வக்கீலாக இவர் இருந்தது அதிர்ஷ்டம் தான்
அழகியோடு அரட்டை அடிக்கும் காட்சி சிலருக்கு அலெர்ஜியை ஏற்படுத்துகிறது
ரோமியோ வேலையை ஆரம் பித்து விட்டானா டக் ளஸ்!
இந்தப் பச்சோந்திப் பயலை நம்பவே முடியாது!
இந்த ரோஜாக்கள் கொள்ளை அழகு
ஆமாம்!
இந்தப் பக்கமாகப் போனது லெனோரின் கார்! போச்சுடா சாமி!


மேடம்! மாடியில் உள்ள பழைய பெட்டிகளில் என்னென்ன உள்ளது என்று முதலில் பார்க்கிறேன்
என்னை ஹனீ என்றே கூப்பிடுங்கள்! பிறகு பார்க்கலாம்!
புழுதி படிந்துள்ள பழைய புத்தகங்கள் இவை!
யாரோ ஒரு புண்ணியவானின் டைரி இது!
வக்கீல் டக்ளஸ் தங்கமானவர் ரிப். எல்லாவகையிலும் எனக்கு உதவியாக இருக்கிறார்
ஓ. அப்படியா. ரொம்ப சந்தோஷம்!
''ரொம்ப சந்தோஷமா?'' மிஸ்டர் கிர்பியின் குரலில் அதைக் காணவில்லையே!



பார்ப்பதற்கு சினிமா ஹீரோ மாதிரி இருக்கிறார் மனுஷன்!
சினிமாவில் வரும் வக்கீல் மாதிரி இல்லாமல் இருந்தால் சரிதான் ஹனீ!
மிஸ்டர் கிர்பியின் முகம் கறுத்திருக் கிறதே!
பலநூறு வருடங் களுக்கு முந்தைய தகவல்கள் வக்கீலின் கரங்களில் சிக்குகிறது!
ஹனீயின் முன்னோர் களில் ஒருவர் சுவாரஸ்யமான பல விஷயங்களை இதில் எழுதி வைத்திருக்கிறார்
மேலே உள்ள அறை களுக்கு ரகசியப் படிக்கட்டுகள்! பழைய ஷெட்டி லிருந்து சுரங்கப் பாதை! மனுஷன் திருடர்களுக்குப் பயந்து என்னென்னவோ கட்டி வைத்திருக்கிறார்
இந்த வரை படங்களை வைத்து கொண்டு இஷ்டம் போல் இந்த வீட்டைச் சுற்றலாம்
சரியான ஜாக்பாட் அடித்து விட்டது
இன்றைய காலைப் பொழுது ரம்மியமாகவும், இனிமையாகவும் உள்ளது, மிஸ் ஹனீ!
ஓ. எஸ். உண்மை தான் விக்கர்ஸ்!


இந்தப் பழைய சாவிகள் தான் இரகசியப் பாதைகளுக்குத் திறவுகோல் போலும்!
பல வருடங்களாக யாருமே இந்தச் சுரங்கப் பாதையை பயன்படுத்தியது கிடையாது! ஹனீயின் பெரியம்மாவுக்குக் கூட இந்தப் பாதையைப் பற்றி தெரிந்திருக்காது
விக்கர்ஸ்! எனக்காக ஒரு குதிரை தயார் பண்ணச் சொல்! இந்தப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்க்கப் போகிறேன்!
நல்லது மிஸ் ஹனீ!
பரம சந்தோஷம் வக்கீலுக்கு!
சுரங்கப் பாதை இங்கேதான் வந்து முடிகிறதாக்கும்! யார் கண்ணிலும் படாமல் வீட்டிற்குள் நுழைவதற்கு அருமையான வழி!
"ஜாலி ரைடு" கிளம்பி விட்டாளா அம்மணி? இது இன்னும் எத்தனை நாளைக்கோ?
இனிமேல் எல்லாமே நல்லபடியாக நடக்கும் என்று நினைக்கிறேன்.



உன்னையும், அந்தக் குண்டோதர பட்லரையும் சீக்கிரத்தில் ஓட ஓட விரட்டுகிறேன் பார்!
அதற்கு முன்னால் இந்த மேப் என்னை இன்னும் எங் கெல்லாம் கொண்டு போய் விடுகிறது என்று பார்க்கலாம்!
மாளிகையின் கனத்த சுவர்களுக்கிடையே கட்டப்பட்டுள்ளது இந்தப் பாதை!
அட...! இதோ இரும்புப் பெட்டி! இதனுள் என்ன இருக்கிறது என்று பார்க்கலாம்!
ஆனால் இது ஒரு பழைய இரும்புப் பெட்டி! சாமான்ய மாய் விட்டுக் கொடுப்பதாக இல்லை!
உஹூம்! உன்னை இவ்வளவு சுலபத்தில் திறந்து ரகசியங்களை அறிய முடியாது!
தேவையான சிறிய ஆயுதங்களுடன் உன்னை மீண்டும் சந்திக்கின்றேன் பயலே!
என்ன ஆச்சரியம்! மாடியில் யாரோ நடமாடுவது போன்றதொரு சத்தம் கேட்கிறது! ஆனால் மிஸ் டோரியன் 'குதிரை சவாரி' போய் விட்டாரே!
வீட்டில், இப்போது என்னைத் தவிர வேறு யாரும் கிடையாதே!




டக்ளஸின் தேடும் படலம் தொடருகிறது!
சாவகாசமமாய், பிறகு வந்து உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்
க்ரீக்! க்ரீக்!!
அட! மாடியில் ஒரு ரூம் உள்ளது போலிருக்கே!
ஆங்! மிஸ்டர் டக்ளஸ், மேலே ஏதாவது வேலை பார்த்துக் கொண்டிருப்பார்! அவர் போடும் சத்தம் தான் இது!
பட்லருக்கு சத்தம் கேட்டிருக்கும்! இப்படியே வெளியே போய் முன் கதவைத் தட்டினால் பயல் ஆடிப் போவான்!
ஹை! விக்கர்ஸ்!! காற்றோட்டமாக ஒருரவுண்ட் போய் விட்டு வருகிறேன்.
ஆனால்!



வ... வந்து... வந்து!
என்னாச்சு? பேயடிச்சது போல முழிக்கிறியே!
நீ... நீங்க வெளியே இருந்தபோது நான் மட்டும் தனியாக வீட்டில் இருந்தேன்! அப்போது யாரோ நடமாடும் சத்தம் கேட்டது!
விக்கர்ஸ்! இந்தப் பழைய காலத்து பேய் மாளிகைகளில் இது போன்ற சமாசாரங்க ளெல்லாம் மிகவும் "சகஜம்"
பே....பேய் மாளிகையா?
யாருமே பேய் நடமாட்டம் இங்கு இருப்பதாகச் சொல்லலியே!
விக்கர்ஸ்! உரக்கப் பேசாதே! பேய் மாளிகை என்றால் சுலபத்தில் விற்க முடியாது!
மிஸ் ஹனீ! இந்த மாளிகையை, அன்பளிப்பாகக் கொடுத்தாலும்கூட நகர்மன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று நான் நினைக்கவில்லை!
எல்லாக் கதவுகளையும், ஜன்னல்களையும் இன்றிரவு மூடி விடு... எதுவும்.. எதுவும் உள்ளே நுழைய முடியாதபடி செய்து விடு!
ச.. சரி சார்! காற்றுக் கூட உள்ளே புக முடியாதபடி பூட்டி விடுகிறேன்.



சவாரி பிரமாதம் விக்கர்ஸ்!
இங்கே என்பாடு திண்டாட்டம் மேடம்!
இது பேய்கள் நடமாடும் புராதன மாளிகை என்று கேள்விப்பட்டேன் மேடம்
என்னப்பா விக்கர்ஸ் உன்குரல் ஏன் இப்படித் தடுமாறுது!
அன்றிரவு-
உண்மைதான் டெஸ்மாண்ட்! எந்தப் பேயாவாது, ஆவி யாவது உள்ளே நுழையக் கூடாது என்று எல்லா கதவு களையும் மூடியிருக் கிறேன்!
விக்கர்ஸ், இது முட்டாள் தனம்! பேய், பிசாசு என்பதெல்லாம் சுத்தப் பேத்தல்!
இருக்கலாம் மிஸ் ஹனீ! ஆனால் இன்றிரவு மிஸ்டர் டக்ளஸின் ஆலோ சனைப் படி கதவுகளை மூடுவதை என் கடமையாகக் கருதுகிறேன்
அதுசரி! கதவு பூட்டி யிருந்தால் பேய்கள் திரும்பிப் போய் விடுமாக்கும்?


ஒரு வழியாக ஜூலியட்டைப் பிரிந்து வந்து விட்டாயாக்கும்?
நமக்குள்ளே சண்டை வேண்டாம் லெனோர்! உன்னை அந்த மாளிகைக்குள் அழைத்துச் செல்ல ஒரு ரகசிய வழியைக் கண்டு பிடித்திருக்கிறேன்! அவர்களைக் கதி கலங்கச் செய்து விடலாம்!
இங்கிருந்தே பாதை ஆரம்பிக்கிறதா!
யெஸ் டார்லிங்! எவனோ ஒரு புண்ணியவான் நமக்காகவே இதைக் கட்டி வைத்திருக்கிறான்!
இது பற்றி யாருக்குமே தெரியாதா!
ஆமாம்!
அந்த மாளிகை முழுவதும் ஏகப்பட்ட ரகசியப் பாதைகள்... ரூம்கள்!
அந்தப் பட்டணத்துக் காரியையும், பட்லரையும் துரத்திய பிறகு என் பங்கை மறந்து விடாதே டக்லஸ்!
இங்கிருந்து பார்த்தால் மாளிகையின் எல்லா முக்கிய ஜன்னல்களும் தெரியும்! எல்லா லைட்டுகளும் அணைந்த பிறகு நாம் கிளம்பலாம்!
எல்லாவற்றையும் பூட்டியாச்சு!
ஹா! எதுவும் இனி உள்ளே நுழைய முடியாது!


ஆரம்பிக்கலாம் லெனோர்!
ஒவ்வொரு விளக்காக அணைக்கப் பட்டு விட்டது! எல்லோரும் உறங்கிப் போயிருப்பார்கள்!
பிறகு என்ன - டிராமாவை ஆரம் பிக்க வேண்டியதுதான்! எத்தனை பேய் படங்கள் பார்த்திருப்பேன்!
மாளிகையின் அடித் தளத்திற்கு வந்து விட்டோம்!
ஆல் ரைட்!
உள்ளே எதுவும் நுழைய முடியா தென்ற நிம்மதியில் விக்கர்ஸ் குரட்டை விட்டுக் கொண்டிருந்தான்.
க்ளிங்! கிளிங்!
பசங்களா.... எழுந்திருங்க... எழுந்திருங்க...
தூள் கிளப்புமா லெனோர்!



சொப்பன லோகத் தையும் ஊடுருவிச் சென்றடைந்தது மணியோசை!
ஜிங்கிள்....
ஜிங்கிள்
நல்லா கனவு கண்டிருக்கிறேன்! ஆனால் அந்தக் கனவு தொடர்வது போலப்படுகிறதே!
ஓ... ஓ.. ஓ.. ஓ ஹ்! ஓ.. ஓ... ஓ.. ஓ ஹ்!
திடீரென்று பிரசன்னமான அந்த உருவம் விக்கர்ஸின் இரத்தத்தை உறையச் செய்தது
என் காதல் இறந்து விட்டது! பலியாகி விட்டது! ஓ.. ஓ... ஓ... ஓ... ஓ.. ஓ ஹ்!
செத்தேன்டா சாமி!
என்ன தான் நடக்குது இங்கே!


போச்சு! என் காதல் சுக்கு நூறாகிப் போச்சு! ஐயோ....
பூட்டிய கதவுகளையும் தாண்டி வந்திருக்கிற தென்றால் இது நிஜமாகவே ஆவிதான்
லெனோரின் நடிப்பு கன கச்சிதம்!
இப்போதைக்கு இ
போதும்! வா....!
விக்கர்ஸ் குரட்டை விடுகிறானா... அல்லது சுவற்றைப் பிறாண்டுகிறானா?
விக்கர்ஸ்! கத
திற!
மி... மிஸ் ஹனீ! என் அறைக்கு இன்றிரவு வரும் இரண்டாவது பெண் நீங்கள்! நாம் அன்று சாலையில் சந்தித்த மர்மப் பெண்ணின் ஆவி சற்று முன் இங்கே வந்தது!
ஏதோ கெட்ட சொப்பனம் கண்டிருக்கிறாய் விக்கர்ஸ்
இந்தப் பழைய இரும்புப் பெட்டிக்குள் என்ன இருக்கு துன்னு பார்க்கணும் லெனோர்
இப்போதை
இங்கிருந்து
விட்டால் தேவ



சத்தியமாக சொல்கிறேன் மிஸ் ஹனீ! நான் விழித்துத் தானிருந்தேன்! அது உண்மையான பேய்
எல்லா கதவுகளை யும் மூடி விட்டதாகச் சொன்னாயல்லவா? பிறகு எப்படி ஆவி வந்ததாம்? ஏதாவது மோசடி வேலையாக இருக்கும்!
பேசாமல் நாம் நியூயார்க் திரும்பி விடலாம்! இங்குள்ள வேலைகளை வக்கீல் டக்ளஸிடம் ஒப்படைத்து விடலாம் மேடம்!
நாளைக்கு இதுபற்றி ரிப்பிடம் பேசப் போகிறேன்! அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கலாம்!
மறுநாள்...
இது தான் நடந்தது ரிப்! விக்கர்ஸ் ஊருக்குத் திரும்பிட நினைப்பதை நான் தவறாகக் கருத வில்லை! இங்கே நிலைமை அப்படி!
ஹனீ! நான் சொல்வதைக் கவனமாகக் கேள்!
விவகாரம் ஆரம்பிக்குதா சார்!
நானும் டெஸ்மாண்டும் கிளம்பி வருகிறோம்! அங்கே நடக்கும் விவகாரங்கள் எல்லாமே ஒரு மாதிரியாகப் படுகிறது
ஓ..... தேங்க் யூ ரிப்! சீக்கிரம் வாங்க!


அதைத் தொடர்ந்து
டெஸ்மாண்ட்.... நீவிக்கர்ஸின் உதவியாளச் என்று சொல்லிக் கொண்டு அங்கே போய் சேர்ந்து கொள்! நான் சொத்துக்கள் வாங்கி விற்கும் ரியல் எஸ்டேட் காரனாக நடித்து டவுனில் ரூம் எடுக்கிறேன்
விக்கர்ஸ் மடையனுக்கு நான் உதவியாளனா? ஆரம்பமே உதைக்குது சார்!
இங்கே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் வரை நாம் பிரிந் திருப்பதுதான் நல்லது!
என் பெயர் டெஸ்மாண்ட்! இந்த மாளிகையில் உதவி பட்லர் வேலைக்கு ஆள் தேவை என்று சொன்னார்கள்!
அடேய்... விக்கர்ஸ் குண்டா... உனக்கு வந்த வாழ்வைப் பார்த்தியா?
பின் பக்கம் பணியாட்களுக் கென்று ஒரு வாசல் இருக்கும்! அங்கே போ,நான் உன்னை வேலையில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறேன்
யானைக்கு ஒரு காலம் வந்தால் -பூனைக்கும் ஒரு காலம் வரும்! அப்போது இருக்கு உனக்கு!
பின் பக்கமாக வரும்போது காலை சுத்தமாக கழுவி விட்டு வரணும் - மறந்துவிடாதே!
அடேய் விக்கர்ஸ் கண்ணா.... இது மாதிரி சந்தர்ப்பம் இனி எப்போதும் கிடைக்காது! டெஸ்மாண்ட் கிழவனை ஒரு வழி பண்ணிடணும்!


ஹம்ம்.... சின்ன ஊர் தான்! இங்கே போய் ஹனீக்கு இந்த தொல்லையா?
DRUGS
கிர்பியின் சிந்தனைச் சக்கரங்கள், சுழலத் தொடங்கின...!
இத்தனை காலமாக இல்லாமல் ஹனீக்கு சொத்து வந்து சேர்ந்தவுடன் இங்கே பேய் நடமாட்டம் ஆரம்பித்தது எத னால்?
ஓ.. இதுதான் அந்த வக்கீலின் ஆபீஸ்! பக்கத்திலேயே விசாரிப்போம்!
குட் மார்னிங் பிரதர்! ஊருக்குப் புதுசோ?
ஆமாம்! நான் சொத்துக்கள் வாங்கி விற்கும் புரோக்கர்!
NO
75
சுற்று வட்டாரத்தில் உங்களுக்குப் பிரயோஜனமாக ஏதுமில்லை. பழைய டோரியன் மாளிகை தான் இருக்கு!
கேள்விப் பட்டிருக் கிறேன்! அங்கேதான் நிறைய பேய் நடமாட்டம் உள்ளதாமே?



பாட்டியம்மா உயிரோடு இருந்தவரை அங்கே பேயும் கிடையாது - பிசாசும் கிடையாது!
அப்படியானால் மாளிகையைப் பார்வையிடலாமே!
அந்த மாளிகையின் வாரிசுதாரர்களின் உரிமையை கவனிக்கும் வக்கீல் பக்கத்தில்தான் இருக்கிறார்...
மிஸ்டர் கிர்பி! அந்தமாளிகை ரொம்பப் பழையது தான்! ஆனால், அடிமனை நிறையப் பெறும்!
மிஸ்டர் டக்ளஸ் உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் நான் மாளிகையைப் பார்க்கலாமா?
இதுதான் டோரியன் மாளிகையாக்கும்!
விக்கர்ஸ்..... அதோ ரிப் வந்து விட்டார்!
மிஸ் ஹனீ அவரை நமக்குத் தெரிந்த தாகக் காட்டிக் கொள்ளக் கூடாது
யெஸ் சார் - உங்கள் பெயர்? உங்களுக்கு யாரைப் பார்க்கணும்?
என் பெயர் கிர்பி, இந்த வீட்டை சுற்றிப் பார்க்கலாமா? பிடித்திருந்தால் இதை வாங்க விரும்புகிறேன்!


நான்தான் இந்த மாளிகையின் புதிய சொந்தக்காரி! விருப்பம்போல் இந்த வீட்டை நீங்கள் சுற்றிப் பார்க்கலாம்
இதை விற்று பணத்தை முழுவதும் இந்த நகரத்திற்கே வழங்குவதாக இருக்கிறேன்
மிஸ் ஹனீ! உங்களுக்கு அழகைக் கொடுத்த கடவுள் ரொம்பப் பெரிய மனசையும் கொடுத்திருக் கிறார்.
பாராட்டுக்கு நன்றி! வந்த வேலையைப் பார்க்க ஆரம்பிக்கலாமே!
இன்னும் எவ்வளவு நேரத்திற்கு இப்படி நாடகமோ!
ஓ. கே. மேடம்!
மாளிகையின் வெளிப்புறத்தை முதலில் பார்க்கிறேன்! உள்ளே இருந்தேன் என்றால் என் கண்கள் உங்களைத் தான் சுற்றிவரும்!
டக்ளஸ் தான் பெரிய மொள்ளமாரி என்று நினைத்தேன்! ஆனால் இவன் அவனையே தூக்கிச் சாப்பிட்டு விடுவான் போலிருக்கே!
இது டெஸ்மாண்ட் -என் உதவி பட்லர்! நீங்கள் எது கேட்டாலும் ஓடோடிக் கொண்டு வருவான்... மிஸ்டர் கிர்பி!
மகிழ்ச்சி சார்!
ஓடோடிக் கொண்டு வருவதா! என்னை என்ன அல்சேஷன் என்று நினைத்து விட்டானா? இதற்காகவே விக்கர்ஸை உதைக்கணும்.


அருமையான கட்டிடம் தான்! ஆனால் இதற்கு முன்பு பேய்கள் நடமாடியதாக யாரும் கேள்விப் பட்டதேயில்லை!
மாளிகையின் அளவை உத்தேச மாகக் கணக்கிட்டுப் பார்க்கலாம்
புரோக்கர் பணியைத் தொடங்குகிறார்
ஓ... மிஸ்டர் கிர்பி... நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?
நான் சில கேள்விகள் கேட்கணும் விக்கர்ஸ்!
தெரிந்தவரை பதில் சொல்கிறேன் சார்.
விக்கர்ஸ், நீ உண்மையைத் தான் சொல்வாய் என்று எனக்குத் தெரியும்! அந்தப் பேயை வீட்டில் நீ பார்த்தது உண்மையா!
சத்தியம் மிஸ்டர் கிர்பி...
எங்கள் காரில் ஏறி மாயமாக மறைந்தாளே - அந்தப் பெண்ணேதான் ஆவியாக வந்தான்!


முதல் மாடியில் கதவுகளும் ஜன்னல்களும் மூடியிருந்ததாக்கும்!
ஆமாம் சார்! யாரும் உள்ளே நுழைவ தென்றால் நீண்ட ஏணி தேவை!
பூமிக்குத் திரும்பும் ஆவிகளுக்கு அப்பாவிகளைப் பயமுறுத்துவதை விட வேறு உருப்படியான வேலைகள் இருக்கணும் விக்கர்ஸ்!
இருக்கலாம் சார்! ஆனால் எல்லாமே விசித்திரமாகத் தான் நடக்கின்றன சார்!
யாரோ உன்னையும் ஹனீயையும் அச்சுறுத்த நினைக்கிறார்கள். யார் - எதற்காக? என்பதுதான் கேள்வி!
வெளிப்புறமுள்ள மற்ற கட்டிடங்களை யும் நான் பார்க்க விரும்புகிறேன்!
போகலாம் சார்!
இந்தக் கட்டிடத்தை மறைந்த மூதாட்டி எதற்காகப் பயன்படுத்தினார் என்று தெரியுமா விக்கர்ஸ்?
தெரியலையே சார்! ஏதாவது வாட்ச்மென் ஷெட்டாக இருந்திருக்கும்!
அட.... இது என்ன?



எது என்ன?
சமீபத்தில் இங்கே வந்த களிமண் உருண்டை இது. இன்னும் ஈரமாக இருக்கிறது! யாரோ இங்கே இன்னும் வந்து போய்க் கொண்டிருக் கிறார்கள்
ஒரேயடியா குழப்புது சார்!?
இங்கேயும் அதே கதைதான்!
எதற்கும் இதை கையில் எடுத்துக் கொள்ளலாம்!
இதைப் பாரேன் கதவிடுக்கில் புதுசாக ஒருநூல் சிக்கியிருக்கு! இங்கே ஏகப்பட்ட "டிராபிக் வந்து போகும் போலி ருக்கே!
நான் இதைக் கவனிக்க வில்லையே சார்!
உங்களுக்கு கழுகுப் பார்வை சார்!
ஹ்ம்ம்ம்.... சரி, வா மாளிகைக்குத் திரும்பலாம்!


எங்கே ரிப்பும் விக்கர்ஸும் ரொம்ப நேரமாகக் காணாமல் போய் விட்டார்கள்?
வந்து கொண்டிருக் கிறார்கள் மேடம்!
ரிப் - ஏதாவது தடயம் கிடைத்ததா?
உஷ்ஷ் - இப்போதைக்கு நான் மிஸ்டர் கிர்பி - சொத்து வாங்கும் புரோக்கர்! அதை மறந்து விடாதே!
வேலைக்காரப் பெண் மில்லியைப் பற்றித் தெரியுமா?
அவள் உன் பெரியம்மா அலிஸுடன் நீண்டகாலமாக இருந்தவளா!
தெரி! அவளை வக்கீல் டக்களஸ்தான் புதிதாக வேலைக்குப் போட்டிருக்கிறார்
ஓஹோ! சுவராஸ்யமான செய்திதான்!
ஆவி விவகாரத்திற் கும் மில்லிக்கும் என்ன சம்பந்தமோ?
அவளே பேயாக வேஷமிட்டு வந்திருக்கலாமே!
இல்லை - நானும் விக்கர்ஸும் பார்த்த பெண் ஆவி 'சிக்' கென்று இளமையாக இருந்தது.



உனக்குத் தெரியாமல் கதவுகளுக்கு யாராவது டுப்ளிகேட் சாவி போட்டிருக்க முடியுமா?
நான் அந்த கோணத்தில் யோசித்துப் பார்க்கவில்லை.
உபசரிப்புக்கு ரொம்ப நன்றி மிஸ் ஹனி! வீட்டின் உட்புறத்தையும் சுற்றி பார்க்க எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.
மில்லி ஒட்டுக் கேட்டுக் கொண்டு இருக்கக் கூடும்
விருப்பப்படி சுற்றிப் பாருங்க மிஸ்டர் கிர்பி!
அழகான கூடங்கள்!
ஒரு நிமிஷம்!
வழி நடையில்
முரண்பாடிருக்கி
இவ்வளவு பெரிய மாளிகையின் வழிநடை இன்னும் நீளமாக இருக்க வேண்டும்.
கருக்கென்று சந்தேகம் ஏற்பட்டது கிர்பிக்கு!
தலைமை பட்லர் விக்கர்ஸ் உங்களுக்கு உதவி செய்ய என்னை அனுப்பினார்! நான் எதாவது செய்யணுமா சார்!
டெஸ்மாண்
வெளியே போ
இந்த வீட்டி
வெளிப்புறத்
காலால் பொ
படையாக அ
வா!


ஏன் - எதுக்குள்னு கேட்பதில் புண்ணியமில்லை!
ஆச்சு - அளந்து பார்த்தாச்சு! போய் சாரிடம் சொல்லலாம்!
அளந்து பார்த்துட்டேன் சார்! அப்புறம்!
அதே முறையில் வீட்டின் இந்த உள் கூடத்தை அளந்து பார்!
என்ன சார்? உள்ளே ரொம்ப கனிசமான அளவு நீளம் குறையுதே!
சார் இந்த வீட்டின் வெளிப்புறம் உள் புறத்தை விட நீளமானது!
நான் நினைத்தது சரிதான் டெஸ்மாண்ட்!


இந்த சொத்து வாங்கும் புரோக்கர்கள் எல்லாமே விவகாரமான ஆசாமிகள்! கிர்பி என்ன பண்ணுகிறான் என்று பார்த்து வைப்பது நல்லது
டக்களஸும் விவகாரமான ஆசாமிதான்!
சார் சுவற்றைத் தட்டி என்ன பிரயோஜனம்?
இருக்கு டெஸ்மாண்ட்!
பட்! பட்
பட்!
ரொம்ப காலத்துக்கு முன் இங்கே ஒரு ரூம் இருந்திருக்க வேண்டும்!
அதைச் சுவர் வைத்து அடைத்திருக் கிறார்கள்!
ஹலோ! மிஸ்டர் டக்ளஸ்! உள்ளே வாருங்கள்
தாங்க் யூ விக்கர் இந்த வீட்டை வா வந்தவர் என்ன ஆனார்?
ஆதிகாலத்து வீடுகளில் இதுபோல் அறைகள் அடைக்கப் பட்டிருப்பது சகஜம் தானே சார்?
நிஜம்தான் டெஸ்மாண்ட். ஆனால் அவற்றிலெல்லாம் வாடகையின்றி பேய்கள் குடி இருப்பதாக நான் கேள்விப் பட்டதில்லை!
யாரோ வருகிறார்கள் சார்!




ஹலோ! ஜெண்டில்மேன். வீடு பிடித்து விட்டதா!
பழைய வீடு என்றாலும் கவர்ச்சியாகத்தான் இருக்கிறது டக்ளஸ்!
இந்த வீட்டில் ஆவிகள் நடமாடுவதாகக் கேள்விப்பட்டேன் டக்ளஸ்! நிஜம்தானா?
அந்தக் கதைகள் மிகைப்படுத்தப் பட்டவை மிஸ்டர் கிர்பி!
இந்த இடம் கோட்டை மாதிரி. பேய் பிசாசுகள் இங்கே அண்ட முடியாது?
மாளிகையின் நீளங்கள் விநோதமாகத் தெரிகின்றன!
ஏதேனும் ரூம்கள் அடைக்கப் பட்டுள்ளனவா?
டெஸ்மாண்ட், நீ இங்கே உதவி பட்லர் தானே? உனக்கு மூடப்பட்ட ரூம்கள் மீது என்ன அக்கறை?
அது - வந்து - சும்மா நடந்து அளந்து பார்த்தோம்
அம்மாடி!



வயசாகிவிட்டாலே இப்படித்தான். பயங்கரமான கற்பனை வந்து விடும்! மாளிகை அருமையாக உள்ளது!
குட்! மேற்கொண்டு பேச வேண்டியவைகளை மிஸ் ஹனியிடம் பேசலாமா?
நேற்று டி. வி. யில் ஒரு பேய் படம் பார்த்தேன்! அந்த நினைப்பில்தான் ஏதோ சொதப்பி விட்டேன்.
மிஸ்டர் டக்ளஸ் - வெளியே உள்ள கட்டிடங்கள் எப்படி உள்ளன? யாராவது பயன்படுத்து கிறார்களா?
லாயங்கள் மட்டுமே உபயோகத்தில் உள்ளன. மற்றவை பலமற்றது!
கீழே விழுந்து கிழுந்து தொலைககும் முன் அவற்றை இடித்து
தரைமட்டமாக் விடலாமா என்று நினைக்கிறேன்
இவனை உள்ளே பார்க்க அழைத்தால் சுரங்கப் பாதையில் நுழைந்தாலும் நுழைந்து விடுவான்
அதோ - லாயங்கள்! ஜோராக உள்ளன!



இதென்ன பழைய ஷெட் இங்கே இருக்கு?
ஓ - அதுவா? அதுவும் உடைசல்தான்!
ஓட்டையோ - உடைசலோ எல்லாக் கட்டிடங்களுக்கும் தீர்வை கட்ட வேண்டுமே!
ஆமாம்.... ஆமாம்!
அது அநாவசியச் செலவு தானே? தேவையில்லாத ஷெட்களை எல்லாம் தரைமட்டமாக்கி விட்டால் மாளிகையை நான் வாங்கத் தயார்!
ஷெட்டை தட்டிவிடும் செலவு என் தலையில் விழுந்து விடக் கூடாது பாருங்கள்.
சீக்கிரம் நாங்களே இடித்து விடுகிறோம்!
இந்த ஆள் ரொம்ப லொள்ளு பண்றான்! சுரங்கப்பாதையை வைத்து என் வேலையை முடிக்கும் வரை ஷெட்டை இடிக்க முடியாது!
இந்த ஷெட்டில் என்னமும் உள்ளதா?
இரும்பு மரச் சாமான்கள் ஏதாவது கிடக்கும்! இதைப்போய் யார் கவனிப்பது!
யாரோ இங்கே வந்து போவது போல் தோன்றுகிறதே!


ஜாக்கிரதை! இந்தத் தரை நொறுங்கி விடக்கூடும்
சுரங்கப் பாதையின் வாசலை நெருங்கி விட்டான்! முதலில் இவனை இங்கிருந்து விரட்ட வேண்டும்!
பார்ப்பதற்கு உருப்படியாத இன்னும் எத்தனையோ இருக்கும்போது இந்த கிழட்டு ஷெட்டில் பொழுதை ஏன் வீணடிப் பானேன்?
நீங்கள் சொல்வதும் சரிதான்!
என்னை இங்கிருந்து விரட்டுவதிலேயே குறியாக இருக்கிறான், பயல்!
ஏராளமான பேய்கள் சுற்றுவட்டாரத்தில் நடமாடுவதாகப் பேச்சு!
இதெல்லாம் அடிக்கடி துளிர்விடும் பழம் கதைகள்! அத்தனையும் பேத்தல்!
குட், பேய், பிசாசு வதந்திகளால் சொத்தின் மதிப்பு குறைவது எனக்குப் பிடிக்காது!
மிஸ்டர் கிர்பி! நாம் இருவரும் நகரத்துக்கு காரிலேயே திரும்பிப் போகலாமா?
ஓ!..... மிஸ் ஹனி! டின்னருக்கு அழைத்தார்! நானும் ஒப்புக் கொண்டு விட்டேன்... டின்னர் முடிந்துதான் கிளம்பணும்
டின்னரா? இவன் போகிற போக்கே சரியில்லையே!




அந்த ஷெட்டில் அப்படி என்ன தான் உள்ளது' என்று கண்டுபிடித்தாக வேண்டும்!
டெஸ்மாண்ட்! என்னோடு வா!
இதோ! உதவி பட்லர் வேலை செய்து அலுத்து விட்டது சார்!
டெஸ்மாண்ட்! யாரும் வந்தால் சத்தம் கொடு! இந்தத் தரைப் பகுதியைப் பற்றி அந்த வக்கீல் ரொம்ப அலட்டிக் கிட்டான்! ஏன்? எதற்காக? என்று கண்டுபிடிக்க வேண்டும்.
ஓ!.... இங்கே உள்ளே தரைப் பகுதி மட்டும் வெற்றிட மாக உள்ளது!
தொப்! தொப்!
டெஸ்மாண்ட்! உதவி பட்லரா லட்சணமா வேலை பார்க்காமல்
இங்கே என்ன பண்ணுகிறாய்?
ஐயா இப்போ பட்லர் இல்லை! பதவி உயர்வு கிடைச்சுடுச்சு! குற்றவியல் நிபுணராக்கும் நான்!



காரிலிருந்து டெஸ்மாண்ட் ஸ்குரூடிரைவரை எடுத்து
வந்த உடன் இந்தப் பகுதி தரையை பெயர்த்து விடலாம்!
தொப்! தொப்!!
நீங்கள் கேட்ட ஸ்குரூடிரைவர் சார்!
தாங்க்ஸ்! டெஸ்மாண்ட்! இந்தப் பகுதியில் கீழே பள்ளமிருக்கிறது!
தொப்! தொப்!!
அடி சக்கை! கீழே சுரங்கப்பாதையோ என்னவோ இருக்குது பார்!
இன்னொரு! உதவி!... காரிலேயிருந்து டார்ச் லைட்டை எடுத்து வா!
குற்றவியல் நிபுணராவதற்காக எதையும் செய்யத் தயார்!
இதுதான் ஆவிகளின் நுழைவு பாதையாக இருக்கும்! வா, டெஸ்மாண்ட்!
ச...சரி சார்!
இந்தச் சுரங்கப்பாதை நேராக வீட்டை நோக்கிப் போகிறது!


படிக்கட்டு வேறு வருகிறதா? எங்கேதான் போய் சேருகிறது என்று பார்க்கலாம்!
அருமையான ஐடியா சார்!
டெஸ்மாண்ட்! இந்தப் பாதை மேல் மாடியை நோக்கிப் போகுது!
நானும் கவனித்தேன் சார்!
ஒரு அறை! அதில் தூசி படிந்ததொரு இரும்புப் பெட்டி!... வாவ்!
மிஸ் ஹனி!... ஈனஸ்வரத்தில் யாரோ பேசுவது போல் கேட்கிறதே?
நிஜம்தானா.... அல்லது நம் கற்பனையா?
இந்தப் பழைய பெட்டகத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்? டெஸ்மாண்ட்!
இதென்ன சார்? நொடியிலே திறந்திடலாம்!
அதை பிற்கு வைத்துக் கொள்ளலாம்! மாளிகையின் வெளிப்புறம் நீளமாகவும் உட் புறம் குறைவாகவும் இருந்ததற்கு இந்த அறைதான் காரணம்!


கூடத்தில் ஹனீயும், விக்கர்சும் பேசிக் கொண்டிருக்கின்றார் கள்! இவர்களைக் கொஞ்சம் சீண்டிப் பார்க்கலாமா?
முன்னாலே தோட்டப் பகுதியிலிருந்து சத்தம் வருதுன்னு நினைக்கிறேன், நான் போய் பார்த்து வரவா மிஸ் ஹனீ?
அதைச் செய் விக்கர்ஸ்!
இப்போதிருக்கு வேடிக்கை!
ஹல்லோ! விக்கர்ஸ் டையா செளக்கியம் தானா?
செத்தேன்டா, சாமி!
எங்கிருந்து முளைத்தீர்கள் இப்படி? ஒரு நொடி முன்னர்கூட நீங்கள் இங்கே இல்லையே?
நல்ல லட்சணமா ஆவியைப் போல் திடீரென்று சுவரைத் துளைத்து வந்தேன்!


ஆல் ரைட்! திரும்பவும் நான் ஆவி வேஷம் போடுகிறேன்! அந்தப் பெட்டகத்தில் என்ன உள்ளது என்று திறந்து பார்!
தூள் கிளப்பி விடுவோம்!
ஒரு நிமிடம் அப்படியே ஆடிப்போனேன் மிஸ்டர் கிர்பி!
சாரி விக்கர்ஸ்!
இங்கே நடக்கும் நாடகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேளை வந்து விட்டது!
இங்கே நடமாடும் சில உயிருள்ள "பேய்களை" எப்படிப் பிடிப்பது என்று சொல்கிறேன் கேளுங்கள்!
ரிப், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்!
ஹனி!... உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து வருவது ஆவிகளல்ல... மனுஷர்கள்!
அவர்கள் யார்?... அவர்களது நோக்க மென்ன? என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்! நிச்சயமாக அவர்கள் திரும்பி வருவார்கள்!


ஆகையால் ''அவர்களை'' வரவேற்கத் தேவையான பொருட்களை நானும் டெஸ்ட்மான்டும் வாங்கி வரப் போகின்றோம்!
க்ளைமாக்ஸ் நெருங்குதோ சார்?
நமக்குத் தேவை யான கத்தி, ஈட்டி, துப்பாக்கி எல்லாமே இங்கே கிடைக்குமா?
ஹா! ஹா!! நாமென்ன யுத்தத்திற்கா போகிறோம்?
விளையாட்டுப் பொருட்கள்
நமக்குத் தேவையானது இங்கேயே கிடைத்துவிடும்!
ப்பூ.. பூ... பூ..!
என்ன சார் இது... இத்தனை வயதுக்குப் பிறகு இப்படியொரு ஆசையா?
பிரமாதம் டெஸ்மான்ட்! நம் திட்டத்திற்கு இந்த முகமூடிகள் அத்தியா வசியத் தேவை!
ஹ்ம்ம்ம்... ஆசை யாரை விட்டது? நானும் இதைப் போட்டுப் பார்க்கிறேன்!
இதை வைத்துக் கொண்டு ஏகப்பட்ட ரகளை பண்ணலாம்!


ஹ..னீ..னீ..னீ.....!
ஹோ! ஹோ! ஹோ!
இது என்ன கூத்து?
விக்கர்ஸ்! நீ தான் சாத்தான் வேஷம் போட லாயக்கு!
ஸ்கூல் டிராமாவில் கூட நான் சாத்தான் வேஷம் போட்டிருக்கின்றேன்.. சார்!
ஹனி! உனக்கு தேவதை வேஷம் படு பொருத்தமாக இருக்கும்!
என்னமோ ரிப்..! நீங்கள் போடும் திட்டம் வெற்றியானால் சரிதான்!
"ஆவி" என்றைக்கு வரும்? என்பது நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் ஒவ்வொரு இரவும் தயாராக இருக்க வேண்டும்!
முக மூடிகளை மறைத்து வைத்துக் கொள்ளுங்கள்! தேவைப்படும் போது பயன் படுத்திக் கொள்ளலாம்! வேலைக்காரப் பொண்ணுக்குக் கூட தெரிய வேண்டாம்!
நான் கவனித்துக் கொள்கிறேன் ரிப்!


இன்றிரவு நாம் டோரியன் பங்களா பக்கம் போக வேண்டாம், விஷயம் கொஞ்சம் சூடு தணியட்டும்!
ஆல் ரைட்! அதுவும் சரிதான்!
சில நாட்கள் அமைதியாகக் கழிந்தன
டெஸ்மான்ட்! அந்த பழைய பெட்டகத்தில் என்ன இருக்கு என்று பார்க்கலாமா!
சரி சார்!
என் பழைய லாவகம் இன்னும் அப்படியே இருக்கிறதா என்று பார்க்க நல்ல சர்ந்தர்ப்பம்!
வேறு யாராவது நம்மை முந்திக் கொண்டு பெட்டகத் தில் கை வைத்திருக்கக் கூடாது!
பார்க்கலாம் சார்!
இது திறக்கப்பட்டு பல வருடங்கள் இருக்கும்!
நல்ல காலம்!
பழைய தஸ்தா வேஜுக்கள், புகைப் படங்கள் உள்ளன! விலைமதிப்புள்ள பொருள்கள் ஏதுமில்லை!


லெனொர் உன்னுடைய ஆவி டிரஸ்ஸை எடுத்துக் கொள்! இன்றிரவு டோரியன் மாளிகைக்குப் போகிறோம்!
ஹனியும் அவள் கூட்டமும் இன்றே மூட்டை முடிச்சை கட்டியாக வேண்டும்!
அந்தப் பழைய ஷெட்டில் வெளிச்சம் தெரிகிறது! யாரோ வந்திருக்கணும் சார்!
குட்! எல்லோரையும் திகில் முகமூடிகளை அணிந்து கொண்டு கூடத்திற்கு வரச் சொல்! ஆவிகளை ஒரு பிடி பிடிப்போம்!
முதலில் பெட்டகத்தை திறப்போம்! பிறகு உன் கை வரிசையைக் காட்டு
சரி
பூ பூ பூ பூ பூ
மை காட்!
ஓ ஓ ஓ ஓ ஓ ஹ்
மானிடர்களே உஷார்!
சாத்தானின் வலையில் சிக்கிவிட்டாய் ஹோ! ஹோ!
இரத்தம்... இரத்தம் தேவை
என் காதல் கை கூடி விட்டது! நாங்கள் சொர்க்கத்தில் கூடப் போகிறோம்



ஐயையோ! நிஜமாகவே இங்கே பேய்கள் உள்ளன!
வழியை விட்டுத் தொலை!
கிழவியோட ஆவியும் வருமுன் ஓடிவிட வேண்டும்!
டக்ளஸ் எனக்கு சொத்தும் வேண்டாம்-பங்கும் வேண்டாம்.
அது வக்கீல் டக்ளஸின் குரல்
தேவதையே பிசாசு நாடகம் போட்டவர்கள் யார் என்பது தெரிந்துவிட்டது.
டக்ளஸ் இந்த வீட்டை விரும்பி இருக்கிறான். உன்னை பயமுறுத்தி திரும்பி ஓடச் செய்து விட்டால் சொற்ப விலைக்கு மாளிகையை அமுக்கி விடலாமென்று திட்டமிட்டு இருக்கிறான்


கடைசியாக ஒரு தடவை ஆவி வேஷத்தில் அவர்களைப் பயமுறுத்திப் பார்க்கலாமா லெனோர்?
ஆளை விடு சாமி! உன் சகவாசமே வேண்டாம்!
என்ன சொல்லுகிறீர்கள் ரிப்? என்னை இங்கிருந்து விரட்ட முயற்சி செய்தது டக்ளஸா? அவனை சும்மா விடக்கூடாது!
இங்கே ஒரு குற்றம் இழைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்வது கடினம் ஹனி!
இந்த எஸ்டேட் பொறுப்பை அவனிடமிருந்து பிடுங்கு! பிறகு இந்த மாளிகையை மியூஸியமாக்கி நகர்மன்றத்திடம் ஒப்படைத்து விடுவோம்!
விக்கர்ஸ் நீ சாத்தான் என்றால் இவள் சூன்யக்காரி!
மி. .. மில்...லி.........
பூ பூ பூ
இது உனக்கு ஒரு பாடம் மில்லி...! அந்த டக்ளஸ் மாதிரி ஆட்களோடு சகவாசம் வைத்துக் கொள்ளாதே!



இப்போ என்ன செய்வது டக்ளஸ்?
நம் வேஷம் கலைந்து விட்டது! எதுவும் தெரியாது என்று கல்லுளி மங்கனாய் சாதிக்க வேண்டியதுதான்!
ஹனி! நான் டவுனுக்குப் போய் டக்ளஸைப் பார்த்து பேசிட்டு வருகிறேன்!
ஜாக்கிரதை ரிப்!
ஹலோ மிஸ்டர் கிர்பி! மாளிகையை வாங்குவது பற்றி முடிவெடுத்து விட்டீர்களா?
நான் ரீயல் எஸ்டேட் வாங்குபவன் அல்ல! நான் ஒரு பிரைவேட் டிடெக்டிவ்!
டோரியன் மாளிகை பக்கமாக நீ திரும்பவும் வந்தால் மென்னியை முறித்து விடுவேன்!
நீ... நீ.:. சி.ஐ.டி.யா?
ஆமாம்! நீயும் உன் சிநேகிதியும் பிசாசு நாடகத்தை தொடர்ந்து நடத்தினால் போலீஸ் வேனில் உங்களை ஏற்ற வேண்டி வரும்!
அந்தப் பழைய பெட்டகத்தில் உருப்படியாக ஏதுமில்லை! பழைய ஆவணங்கள், போட்டோக்கள் தான் இருந்தன! அதை நினைத்து மனதை தேற்றிக் கொள்!



இங்கிருந்து கிளம்பின பிறகு என் அஸிஸ்டண்ட் பட்லர் வேலைக்கு முழுக்கு போட்டு விடுவேன்!
நானே உன் சீட்டைக் கிழிப்பதாய் இருந்தேன்!
ஹனீ, நாளுக்கு நாள் உன் அழகு கூடும் ரகசியம் என்னவோ?
மாளிகையை இன்று நகர் மன்றத்திடம் ஒப்படைக்க இருப்பது பற்றி பூரித்துப் போயிருக்கிறேன் ரிப்
வந்ததற்கு உருப்படியாக இந்த வேலையாவது ஆச்சே!
மெடல் ஏதாவது கொடுப்பாங்களோ?
மிஸ்டர் மேயர் - என்னுடைய பெரியம்மா அலிஸின் மாளிகை இனி இந்த நகருக்கே சொந்தம்!
நன்றி மிஸ் ஹனீ! அற்புதமான மியூஸியமாக அதை மாற்றி விடுவோம்!
நியூயார்க் திரும்பிய தில் மகிழ்ச்சி தானே ஹனீ?
இருக்குமிடம் தானே சொர்க்கம் ரிப்?




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக ''லயன் காமிக்ஸ்'' மாத இதழை அச்சி டுபவரும், வெளியிடுபவரும், ஆசிரியரும் S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர் ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. ஃபோன் : 20649, வெளியீடு எண் : 82. அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.

## லயன் வாசகர் கடிதம்

- **T. L. கண்ணன், சாமல்பட்டி**
  ''பழி வாங்கும் புயல்'' மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. முதல் பாதியை படித்தவுடனேயே முடிவு என்ன என்று தெரிந்து கொள்ளும் ஆவலை ஏற்படுத்தி விட்டது.
- **L. வெங்கடேஸ்வரன், சா. அய்யம்பாளையம்**
  பழி வாங்கும் புயல் படித்தேன். அப்பாவி நவஜோ இளைஞர்களை கொடூரமாக கொலை செய்த கயவர்களை தண்டிப்பதில் டெக்கஸ் வில்லரின் துடிப்பு பாராட்ட தக்கது. டெக்ஸ் வில்லரின் துல்லியமான திட்டமிட்ட தாக்குதல்கள் கதையை விறுவிறுப்பாக கொண்டு சென்றன. அநீதியை எதிர்ப்பதில் டெக்ஸ் வில்லருக்கு துணையாக நின்ற பத்திரிகையாளர் ப்ளாயிட் எங்கள் மனதில் இடம் பிடித்து விட்டார்.
- **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**
  ஆக்ஷன் ஹீரோவான காரிகன் குரங்குக் குட்டியைக் காப்பாற்ற வெள்ளத்தில் பாய்வதும் லின்னுக்காக ரோபோவுடன் தந்திரமாக போரிடுவதும் Super. விஞ்ஞானமும், மனிதாபிமானமும் 'கை' குலுக்குவது செம சென்டிமெண்ட்.
- **J. A. ராஜேஷ், சென்னை 600 015.**
  ஸ்ஸ்ஸ்.. வேற்று கிரகவாசிகள் பறந்துட்டாங்களா.. அப்பாடா காரிகனுக்கு முதல்ல நன்றி! உண்மையிலேயே ஒரு கலக்கு கலக்கி விட்டார்!
- **A. அப்துல் அமீது, காஞ்சிபுரம்**
  காரிகன் லின்னை ஆரெனுக்கு விட்டு கொடுக்கும் போதும், ரோபோவான 'மிர்'ருடன் காரிகன் கை குலுக்கும் இடமும் என் மனதை வெகுவாக பாதித்தது.
- **மதுக்கூர் ரமேஷ், மதுக்கூர்.**
  காரிகனின் வித்யாசமான பாணியை ''ஒரு பனிமலை பயங்கரத்தில்'' கண்டு- படித்து- வியந்து- மகிழ்ந்தோம்.

# இலங்கை வாசக நண்பர்கள் கவனத்திற்கு :

சமீப காலமாகவே பல இலங்கை வாசகர்கள் நமது வெளியீடுகளின் சந்தா விபரம் பற்றிக் கேட்டு வருகின்றனர். ஏர்-மெயில் கட்டணங்கள் மிக அதிகமாக இருப்பதால் மாதம் ஒன்றிற்கு தபால் செலவு + பிரதிகளின் விலை சேர்ந்து மொத்தம் ரூ. 27/- ஆகிறது. அவ்வளவு பணம் செலுத்தி புத்தகங்களைப் பெறுவது எல்லா வாசகர்களுக்கும் சாத்தியப்படாது, என்பதால் இலங்கையிலேயே நமது பிரதிகள் கிடைத்திட ஏற்பாடு செய்து வருகிறோம். இலங்கையில் கீழ்க்கண்ட முகவரியில் நமது பிரதிகள் அனைத்தும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**M/s. L. முத்தையா அன் கோ,**

155, பிரின்ஸ் தெரு, 2 வது மாடி,

கொழும்பு - 11 தொலைபேசி - 549099.

## FORM IV (See Rule 8)

**Statement about ownership and other Particulars about Newpaper "LION COMICS"**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | 8/D-3, Chairman P. K. S. A. A. Road, Sivakasi 626 123. |
| 2. | Periodicity of this Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. VIJAYAN |
| | Whether Citizen of India (If foreigner State the Country of origin) | : | Yes |
| | Address | : | 288-A, National Colony, Sivakasi - 626 123. |
| 4. | Printer's Name | : | S. VIJAYAN |
| | Whether Citizen of India (If foreigner State the Country of origin) | : | Yes |
| | Address | : | 288-A, National Colony, Sivakasi - 626 123. |
| 5. | Editor's Name | : | S. VIJAYAN |
| | Whether Citizen of India (If foreigner State the Country of origin) | : | Yes |
| | Address | : | 288-A, National Colony, Sivakasi - 626 123. |
| 6. | Names and Address of individuals who own the newpaper and partners or shareholders holding more than one percent of the total capital | : | S. Vijayan, M. S. Sathiaprabha, S. V. A. Kandaswamy Nadar, S. Prakash Kumaran |

I, S. VIJAYAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**Dated: 28-2-92**

**S. VIJAYAN,**
**(Sd) Publisher.**

## கைவசம் உள்ள முத்தைய வெளியீடுகள்

**லயன் காமிக்ஸ் :**

| | | |
|---|---|---|
| i) பொக்கிஷம் தேடிய பிசாசு | - | ரூ. 3/- |
| ii) Operation அலாவுதீன் | - | ரூ. 3/- |
| iii) ஒரு பனிமலை பயங்கரம் | - | ரூ. 3/- |
| iv) பழி வாங்கும் புயல் | - | ரூ. 6/- |

**திகில் :**

| | | |
|---|---|---|
| i) காணாமல் போன கழுகு | - | ரூ. 3/- |
| ii) சிரிக்கும் மரணம் | - | ரூ. 3/- |

**மினிலயன் :**

| | | |
|---|---|---|
| i) கொலைகாரக் காதலி | - | ரூ. 4/- |

**English :**


| | | |
|---|---|---|
| i) Pushpa Chithra Katha | - | Rs.4-50. |

மேற்கண்ட புத்தகங்கள் மட்டுமே கைவசம் உள்ளன. பிரதி ஒன்றிற்கு தபால் செலவு 0-50 பைசா சேர்த்து M. O. அனுப்பி பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

- நிர்வாகி.



ஒரு சூப்பர் நியூஸ்!
மே மாதம் வருகிறது!
லயன் ஹாலி-டே சூப்பர் ஸ்பெஷல்!
லயன் காமிக்ஸ்
ஸ்பைடர் தோன்றும்
பாட்டில் பூதம்!
அரை டஜன் டாப் கதைகள்!
பெரிய சைஸ்!
228 பக்கங்கள்!
விலை ரூ. 10/-


பெருச்சாளிப் பட்டாளம்!


மீண்டும்
டாக்டர் செவன்!
F.B.I.
ஏஜெண்ட்
காரிகன்
சாகஸம்!



ரிப் கிர்பி & டெஸ்மாண்ட் தோன்றும்
மரண மயக்கம்!
விந்தை மனிதர் ரேடார் தோன்றும்
ஒருலாலிபாப் படலம்!
மறையும் மாயாவி ஜாக் தோன்றும்
வைர வேட்டை!



மர்ம மாளிகை!
லயன்
காமிக்ஸ்
ரூ-3/-